## முன்னுரை

இந்தியாவில் சாதி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இனப்பிரிவினர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வோர் இனத்தவரும் தனிச் சமுதாயமாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய இனப் பிரிவுகளில் ஒன்று தமிழ்நாட்டின் தென்பகுதியான கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளை வட்டத்தில் வாழ்ந்து வருகின்ற **'வெள்ளாளர்'** என்று பேச்சு வழக்கிலும், **'வேளாளர்'** என்று இனப்பிரிவாலும் அழைக்கப்படக் கூடியவர்கள். இவர்கள் மேல் மட்ட சமுதாயத்தினராக வாழ்ந்து தற்போது பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக தங்களை அறிவிக்க வேண்டும் என்று பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவ்வாய்வேட்டில் நாஞ்சில் நாட்டு வேளாளர்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்வியல் ஆராயப்படுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

ஆய்வாளரால் ஆராயப்பட்டுள்ள ஆய்வின் தலைப்பு **"நாஞ்சில் நாட்டு வேளாளரின் வாழ்வியல்" (தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்)** என்பதாகும். இவ்வாய்வு தோவாளை வட்டத்தில் வாழ்ந்து வரும் வேளாளர்களின் வாழ்க்கை முறைகளை மையமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வுக்களம்

வேளாளர்கள் வாழ்கின்ற தோவாளை வட்டத்தை மையமாகக் கொண்டு அவர்களின் வாழ்வியல் ஆராயப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய இரண்டு வட்டங்களில் நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் வாழ்ந்து வந்தாலும் **'செய்வன திருந்தச் செய்'** என்பதற்கேற்ப தோவாளை வட்டத்தில் வாழ்ந்து வரும் வேளாளர்களின் வாழ்விடமே ஆய்வுக் களமாகக் கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

அறியாதிருக்கும் செய்திகளை அறிய முயன்று அவற்றின் உண்மைகளை வெளிக் கொணர்வது ஆய்வின் பொதுவான நோக்கமாகும். இவ்வகையில் வேளாளர்களின் வாழ்வியல் பற்றியும், வேளாளர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தனர் என்பதையும் வெளிக்கொணரும் நோக்கிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வின் கருதுகோள்

தோவாளை வட்டத்தில் வாழ்ந்து வரும் நாஞ்சில் நாட்டு வேளாளரின் வாழ்வியல், பிற சமுதாயத்தினரின் வாழ்வியலிருந்து வேறுபட்டது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## ஆய்வு ஆதாரங்கள்

ஆய்விற்குத் தேவையான தரவுகள் முதன்மை, துணைமை ஆதாரங்கள் மூலம் சேகரித்தவையாகும்.

### முதன்மை ஆதாரங்கள்

நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் வாழ்வியல் முறைகளை அடிப்படையாகக் கொண்டு வேளாளரின் வரலாறு, சடங்குகள், நம்பிக்கைகள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியவற்றைப் பற்றித் தகவலாளிகளிடம் கண்ட பேட்டி, வினா நிரல், உற்று நோக்குதல், புகைப்படங்கள் போன்றவை முதன்மை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

### துணைமை ஆதாரங்கள்

நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் வரலாறு பற்றிய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், கலைக்களஞ்சியங்கள், ஆய்வேடுகள் ஆகியவை துணைமை ஆதாரங்களாகும்.

## ஆய்வின் மொழிநடை

**“நாஞ்சில் நாட்டு வேளாளரின் வாழ்வியல்” (தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்)** என்னும் ஆய்வானது கள ஆய்வு என்பதால் நாஞ்சில் நாட்டு வேளாளரின் பேச்சு வழக்குச் சொற்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் எளிய தமிழ் நடையே பரவலாக பயன்படுத்தபட்டுள்ளது.

## ஆய்வின் அணுகு முறை

**“நாஞ்சில் நாட்டு வேளாளரின் வாழ்வியல்” (தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்)** என்னும் ஆய்வானது சமுதாயவியல் அணுகுமுறை, வரலாற்றியல் அணுகு முறை மற்றும் விளக்கமுறை அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகளில் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வேட்டின் பாகுபாடு

ஆய்வேடு **ஆய்வு அறிமுகம், ஆய்வு நிறைவுரை** நீங்கலாக நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. **வேளாளர் வரலாறு**
2. **வேளாளரின் சடங்குமுறைகள்**
3. **வேளாளர் நம்பிக்கைகள்**
4. **வேளாளர் வாழ்வியலில் பழமொழிகளும், விடுகதைகளும்**

**‘ஆய்வு அறிமுகம்’** என்னும் தலைப்பில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுக்களம், ஆய்வு நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வின் ஆதாரங்கள், ஆய்வின் மொழிநடை, ஆய்வின் அணுகுமுறை, ஆய்வேட்டின் பாகுபாடு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**‘வேளாளர் வரலாறு’** என்னும் முதலாம் இயலில் வேளாளர் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. வேளாளர் என்ற சொல் வேளாண்மை என்ற சொல்லை

அடிப்படையாகக் கொண்டதாகும். இவர்களின் முக்கியத் தொழில் வேளாண்மையாகும். சோழர் காலத்தில் இவர்கள் பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பிற பகுதிகளில் இருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாஞ்சில் நாட்டில் குடியேறியவர்கள். விஜய நகர அரசர் காலத்தில் கார் காத்தார், சோழிய வேளாளர், கொடிக்கால் வேளாளர் என்ற மூன்று பிரிவில் காணப்பட்ட வேளாளர்கள் நாயக்கர் காலத்திலும் கார் காத்தார், கொங்கு வேளாளர், சோழிய வேளாளர், கொடிக்கால் வேளாளர் என்ற பிரிவிலும் காணப்பட்டனர். மராட்டியர் காலத்தில் காராளக் குடியினர், வாழையிலைக் கொடியினர், வெற்றிலைப் பேட்டையார் போன்ற பிரிவுகளிலும் காணப்பட்டனர். பலப் பிரிவுகளாக காணப்பட்டாலும் தற்போது அரசு வெளியிட்டுள்ள வேளாளர் வகைகள் 138 ஆக உள்ளன. இவை குறித்து இவ்வியலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**'வேளாளரின் சடங்குமுறைகள்'** என்ற இரண்டாவது இயலில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள் ஆராயப்பட்டுள்ளன. கருவுறுதல் தொடங்கி குழந்தையின் ஒரு வயது பூர்த்தியாகி மொட்டை அடித்து, காதுகுத்துதல் வரையிலானவை பிறப்புச் சடங்குகள் ஆகும். கருவுறுதல் தொடங்கி சீமந்தம் (வளைகாப்பு) வரை பிறந்த வீட்டாரால் பல சடங்குகள் செய்யப்படுகின்றன. குழந்தை பிறந்தவுடன் **'சேனைகொடுத்தல்'** வீட்டின் மூத்தவர்களால் கொடுக்கப்படுகிறது. **'சட்டிப்பானை தொடுதல்', 'பிறந்த நாள் விழா', 'காதுகுத்துதல்'** ஆகியவை இரு வீட்டினராலும் கொண்டாடப்பட்டாலும் செலவு பெரும்பாலும் பிறந்த வீட்டினர் செய்வதாகவே உள்ளது.

இறப்புச் சடங்குகள் ஒருவர் இறந்தது தொடங்கி திவசம் வரை உள்ளவை ஆகும். ஒருவர் இறந்தவுடன் அவரைக் குளிப்பாட்டுதல், விளக்கு முன் பொருட்கள் வைத்தல், மாரடி அடித்தல், அந்திக்கு அழுதல், கிழமை முறை ஆகியவை

அடியந்திரம் என்னும் 16-ஆம் நாள் வரை செய்யும் சடங்குமுறையாகும். அதன் பின் 41-ஆம் நாளும், ஒரு வருடம் கழிந்த பிறகு திவசமாகவும் கொண்டாடப்படுகிறது.

பெண் குழந்தை பெரியவள் ஆனதை உலகுக்கு அறிவிப்பதைச் **'சடங்கு'** என்றும் பூப்புச் சடங்கு என்றும், பூப்புனித நீராட்டு விழா என்றும் அழைக்கின்றனர். முதல் நாள் தலைக்கு தண்ணீர் ஊற்றுவதில் தொடங்கி சிறப்பு உணவு கொடுத்தல், விழா எடுத்தல், தாய் மாமன் சீர் ஆகியவைக் குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. நிச்சயத்தாம்பூலம் தொடங்கி தாலிப் பெருக்குதல் வரையிலானவை திருமணச்சடங்குகள் ஆகும். நிச்சயத்தாம்பூலம் அல்லது வெற்றிலை கைமாற்றுதல், தாலிக்குப் பொன்னுருக்குதல், ஊரழைத்தல், திருமணம், உடன்மறுவீடு, வரவேற்பு, நாலாம் நீர், ஏழாம் நீர், மறுவீடு, இரண்டாம் மறுவீடு, தாலிப் பெருக்குதல், முளைப் பாலிகை கரைத்தல், மாங்கல்ய காடி காய்ச்சுதல் ஆகியவற்றைப் பற்றியும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**'வேளாளர் நம்பிக்கைகள்'** என்னும் மூன்றாம் இயலில் வேளாளர் வாழ்வியலில் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள் ஆராயப்பட்டுள்ளன. இந்நம்பிக்கைகள் அச்சத்தின் காரணமாகத் தோன்றியதாகும். வேளாளர்கள் சகுனங்கள் பற்றியும், கிழமைகள் குறித்தும் நம்பிக்கை கொண்டிருந்தனர். பூனூல் அணிந்த பிராமணர்கள் இருவர் எதிரே வருவது நல்ல சகுனம் என்றும், ஒருவர் வந்தால் கெட்ட சகுனமென்றும் கருதப்பட்டது. **"**ஆண்பூசம் அரசாளும், பெண்பூசம் பூசி கமத்தும்**"** என்ற நட்சத்திர நம்பிக்கையும் வேளாளர்களிடையே காணப்படுவது குறித்தும், நாட்களில் அஷ்டமி, நவமி போன்ற திதிகளும், கிழமை பற்றிய நம்பிக்கைகளும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**'வேளாளர் வாழ்வியலில் பழமொழிகளும் விடுகதைகளும்'** என்னும் நான்காவது இயலில் வேளாளர்கள் வாழ்வில் பழமொழிகளும், விடுகதைகளும் பெற்றுள்ள இடம் ஆராயப்பட்டுள்ளது. பெரியவர்கள் ஒவ்வொரு செயலுக்கு நேரடியாக ஏசாமல்

பழமொழியைக் கூறியே சரிப்படுத்துகின்றனர். மாமியார் மருமகளுக்குகிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை **“**மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்**”** என்ற பழமொழி புரிய வைக்கிறது. விடுகதைகள் பெரும்பாலும் பொழுதுப் போக்குவதற்காகவும் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்காகவும் பயன்பட்டன. பெரியவர்கள் சிறியவர்களிடம் கூறுவதாகவே விடுகதைகள் அமைந்துள்ளன. பெரும்பாலும் அதன் விடை ஒரு நாள் அல்லது இருநாள் வரை யோசித்து சொல்வதாகவும் அமைந்திருக்கும்.

தற்போது பழமொழிகள் வேளாளர்கள் வாழ்வில் நீங்காத இடத்தைப் பெற்றாலும் விடுகதையின் இடத்தை தொலைக்காட்சி போன்ற பொழுதுப் போக்கு சாதனங்கள் பெற்றுள்ளதால் அவை மறைந்து வருவது குறித்தும் இவ்வியலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**‘ஆய்வு நிறைவுரை’** என்னும் தலைப்பு இவ்வாய்வேட்டில் கண்டறிந்த உண்மைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து ஆய்வுக்குத் துணை நின்ற **‘துணை நூற்பட்டியல்’** அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**‘பின்னிணைப்பில்’ வரைபடம்**, **தகவலாளிகள் பட்டியல், பேட்டி, புகைப்படங்கள்** ஆகியவை இடம்பெற்றுள்ளன.

## முன்னுரை

கூடி வாழ்வதே சமுதாயமாகும். **“மனிதன் உருவாகி வந்த அதே காலத்திலேயே மனிதர்களுக்குள் இனப்பிரிவுகளும் தோன்றலாயிற்று.”**[1] மனிதர்கள் தங்களுக்குள்ளே பொதுவாக அமைந்துள்ள நிறம், உடலமைப்பு, உயரம், தலைமுடி, கண்ணின் நிறம் ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் இனமாகப் பிரிந்தார்கள். அந்த இனத்திற்குள்ளும் பலப் பிரிவுகள் தோன்றின. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் கண் பண்பும் செயலும் குடிமையும் காரணமாக **“**அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்ற நாற்பாவாக தமிழக மாந்தர்கள் அமைந்தனர்.**”**[2] **“**இதில் குறிக்கப்படும் வேளாளர் என்னும் பிரிவினரே குமரிமாவட்டத்தில் வெள்ளாளர் என்று மருவி வழங்கப்படுகின்றனர்.**”**[3] இவ்வியலில் வேளாளர் சமுதாயத்தின் பூர்வீகம், பிரிவுகள் மற்றும் இன்றைய சமுதாயத்தில் வேளாளர்களின் நிலை ஆராயப்படுகின்றன.

## குமரிமாவட்டம்

**“**புலவர்களால் **‘தண்துறைக்குமரி’** என்று விதந்து பாராட்டப்பட்டதும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாக விளங்குவது குமரிமாவட்டம். இது இந்தியத் துணைக் கண்டத்தின் தென்- கோடியில் முக்கடலால் சூழப்பட்டு விளங்குகிறது. இதன் மொத்தப் பரப்பளவு 1,684 சதுர கி.மீ.”[4] தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு எனும் 4 தாலுகாக்களை உள்ளடக்கித் திகழும் குமரிமாவட்டத்தின் தலைநகராக நாகர்கோவில் விளங்குகிறது.

## தோவாளை வட்டம்

தோவாளை வட்டம் **‘நாஞ்சில் நாடு’** என குமரி மாவட்டத்தினரால் அழைக்கப்படும் பகுதியாகும். நாஞ்சில் நாட்டின் உள்ளடங்கிய பகுதியான தோவாளை

வட்டத்தில் பல கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன. இத்தோவாளை வட்டத்தில் வேளாளர்,

1. **மக்கள் வழி வேளாளர்**
2. **மருமக்கள் வழி வேளாளர்**
3. **சைவ வேளாளர்**

என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து வாழ்கின்றனர்.

## வேளாளர் பிரிவுகள்

முற்காலத்தில் வேளாளர்கள் ஒரு சிலப் பிரிவுகளாகவே வாழ்ந்தனர். வேளாளர் தம்முள் நுண்ணறிவால் சிறந்தவரை அறிவுநூல் ஓதுதற்கும், திருக்கோயில்களில் கடவுள் வழிபாடு ஆற்றுதற்கும் ஒரு வகுப்பினராகத் தேர்ந்தெடுத்து இருந்தனர். இவர்கள் அந்தணராவர். இவர்கள் ஆதிசைவர், குருக்கள், பட்டர், நம்பியார் என்று அழைக்கப்பட்டனர்.

போர் செய்வதற்குரிய ஆற்றலும், குடிகளைப் பாதுகாத்தற்குரிய அறிவு வலிமையுடைய வேளாண் மக்களைப் பிரித்து அரசாளுதற்கு வைத்தார்கள். எனவே முற்காலத்தில் அரசரும், வேளாளர் பிரிவில் ஒரு பிரிவினராகக் கருதப்பட்டனர்.

உழவுத்தொழில் செய்வதற்கேற்ற கணக்கறிவும், இன் சொல்லும் இயற்கையாகவே வாய்ந்தவராய் உள்ள தம்மினத்தவரில் ஒரு சாராரைப் பிரித்து அவரை வணிகராக நிறுத்தினர். இங்ஙனம் நிறுத்தப்பட்ட வணிக வேளாளரே தொன்று தொட்டு இன்று வரை கொலை, புலை முதலியன தவிர்த்த அறிவொழுக்கத்தினராய் **'வேளாண்செட்டிகள்'** என்று பெயர் பெற்று வருகின்றனர். இவ்வாறு முற்காலத்தில் மூன்று பிரிவுகளாக வாழ்ந்தவர்கள் தற்பொழுது பலப்பகுதிகளில் வாழ்கின்றனர். அவர்களைத் **துளுவ வேளாளர், கொண்டை கட்டி வேளாளர், கொடிக்கால் கார வேளாளர், கானகீழ் நாட்டார் (கானக்கிழி நாட்டார்) பாண்டிய வேளாளர், கார்காத்த**

**அல்லது காரைக் காட்டார், காணியான வேளாளர், சோழிய கொங்கு வேளாளர், நாஞ்சில் நாட்டு வேளாளர், கொடுப்புழை வேளாளர், நல் வேளாளர், வேளாண் செட்டிகள்** எனப் பாடுப்படுத்தலாம்.

## நாஞ்சில் நாடு

**"**குமரி மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுகாக்களை உள்ளடக்கிய பகுதி அன்றும் இன்றும் நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படுகிறது.**"**[5] இந்தப் பெயர் பழங்காலத்திலிருந்து வழங்கப்பட்டு வந்ததாகும்.

## பெயர்க்காரணம்

நாஞ்சில் என்ற பெயர் சங்க காலத்திலேயே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு புறநானூறு சான்று தருகிறது. **"புறநானூற்றில் வரும் உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந"** என்ற வரி உயர்ந்த சிகரத்தையுடைய நாஞ்சில் என்னும் பெயரையுடைய மலைக்கு வேந்தே என்னும் பொருளைத் தருகிறது. **"**நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்ட நாடு நாஞ்சில் நாடாகும்.**"**[6]

**"அரிசி கேட்ட ஔவைக்கு யானையைப் பரிசிலாகத் தந்த நாஞ்சில் வளவன் என்னும் புரவலன் ஆண்ட நாடானதால் நாஞ்சில் நாடு"**[7] எனப் பெயர் வந்து என்பது தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கருத்தாகும்

**"**நாஞ்சில் என்ற சொல்லுக்குக் கலப்பை என்னும் பொருளும் உண்டு. வயல் நிறைந்த இந்நாட்டில் நிலத்தை உழுவதற்கு கலப்பைகள் பயன்படுத்தப்பட்டதால் நாஞ்சில் நாடு என்னும் பெயர் பெற்றது என்பார். மற்றொரு சாரார் - நாஞ்சில் என்பதற்கு மதில், உறுப்பு எனும் பொருளும் உண்டு. மலைகளும், கடல்களும்

இப்பகுதிகளுக்கு இயற்கை அரண்களாக அமைந்துள்ளமையால் நாஞ்சில் நாடு என்று பெயர் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது."[8]

## நாஞ்சில் நாட்டின் சரித்திரம்

"சங்க காலத்திற்குப்பின் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளாக (கி.பி.650 வரை) நாஞ்சில் நாட்டுப்பகுதி சேரர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பின் பாண்டியர்களின் கைக்குச் சென்றது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து 13-ஆம் நூற்றாண்டு வரை சோழர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது என்று சாசனங்கள் உணர்த்துகின்றன. சோழவம்சம் வலிமை குன்றி அழியவே, கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து மீண்டும் சேர அரசர்கள் நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றி ஆளத்துவங்கினர். அதன்பின் விஜயநகரப் பேரரசர்களாலும், நாயக்க அரசர்களாலும் மிகவும் அல்லல்பட்டது. கி.பி. 1635-இல் நாயக்கர் படை நாஞ்சில் நாட்டை மிகவும் துன்புறுத்தியது. கி.பி. 1700–க்குப்பின் தான் நாஞ்சில் நாட்டில் சிறிதளவு சமாதானம் ஏற்பட்டது எனலாம்"[9]

## பூர்வீகம்

நாஞ்சில் நாட்டில் வாழும் மக்களைப் பற்றி பல வரலாற்றுச் சான்றுகளும், வாய்மொழிக்கதைகளும் கூறப்படுகின்றன. "நாஞ்சில் நாட்டில் பல குடும்பத்தினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அங்கு குடியேறியவர்கள். ஒரு சில குடும்பத்தினர் படையெடுப்போடு வந்தவர்களாயிருக்கலாம். சிலர் பூர்வ குடிகளாகவும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலோர் பாண்டியநாடு, சோணாடுகளிலிருந்து சென்றவர்களேயாவர்."[10]

## வேளாளரின் பூர்வீகம்

"நாஞ்சில் நாட்டு வேளாளர் அனைவரும் பிற பகுதிகளிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அங்கு குடியேறிப் படைத்தலைமை பூண்டும், வீரராய் அமைந்தும், நாட்டின் ஆட்சித் துறையில் அதிகாரம் வகித்தும் வந்தவர்களாவர்.

இவர்கள் நாஞ்சில் நாட்டில் பெரும் நிலத்தில் உரிமையாளர்களாய் இருந்தனர். பாண்டி முதலிய பிரதேசங்களிலிருந்து வரும் படைகளைத் தடுத்தும், ஆட்சியில் அதிகாரம் தாங்கி அரசியல் செம்மையாக நடைபெறுவதற்கு உதவி புரிந்தும், உழவு, வாணிபம், முதலிய தொழில்களை மேற்கொண்டு நாட்டின் நலத்தைப் பேணியும், பெருந்தொண்டு புரிந்து வந்தனர். சேர அரசர்களுக்கு இன்றியமையாத பெருங்குடிகளாய் அமைந்தனர். ஆட்சி நடத்துவதற்கு வேண்டும் பொருள், வருவாய் பெரும்பாலும் இந்நாஞ்சில் நாட்டினரிடமிருந்தே பெறக்கூடியதாயிருந்தது. சுருங்கக் கூறின் சேர ராஜ்ஜியத்தின் உயர் நிலையிலிருந்து அரசு செழிக்கும்படிச் செய்தது, நாஞ்சில் நாடேயாகும்.**”**[11]

குமரிமாவட்டத்தில் நாடு என்றால் நாஞ்சில் நாட்டினையும், நாட்டார் என்றால் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்களையும் குறிக்கிறது. இந்நாட்டில் வாழ்ந்து வரும் பிற சமுதாய மக்களுக்கு **‘நாஞ்சில் நாட்டு’** என்ற அடைமொழி கிடையாது. இவர்களின் குலத்தொழில் வேளாண்மை என்றாலும் கணக்கு வழக்கில் திறமையுடையவர்களாக அக்காலத்தில் விளங்கினார்கள்.

வெள்ளாளர்கள் என்றால் வெள்ளத்தில், நீர் நிலைகளில் ஆட்சி புரிபவர்கள் எனப் பொருள்படும். பல ஆயிரம் ஆண்டுகளாக அரசர்களுக்கும், வணிகர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் கணக்கு வழக்குகளை இவர்கள் திறம்பட கவனித்து வந்ததால் **‘கணக்குபிள்ளை’** என்ற சொல் இன்றும் நிலைபெற்றுள்ளது.

நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்களின் பூர்வீகமும் சோழ நாட்டின் காவேரிபூம்பட்டினம் எனப் பலதமிழக வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் மூதாதையர்கள் சோழ நாட்டின் நாகப்பட்டினம் பகுதியிலிருந்து நாஞ்சில் நாட்டில் குடியேறினவர்கள் எனக் கவிமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூரின் கிழக்கே நம்பியாறு ஓடுகிறது. நம்பியாற்றின் தெற்குக் கரையில் சித்தூரில் தென்கரை மகராஜன் திருக்கோவில் உள்ளது. அக்கோவிலினுள் தளவாய் வன்னியன், வீரமணி, பேச்சியம்மன் முதலிய சிறு தேவதைகளின் கோவில்களும் உள்ளன. அவ்வூரைச் சுற்றிலும் வெள்ளாளர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவர்களும் அங்கிருந்து குடி பெயர்ந்து நாஞ்சில் நாட்டின் ஆரல்வாய்மொழி, தோவாளை, கடுக்கரை, புத்தேரி, பூதப்பாண்டி, சிறமடம் முதலிய ஊர்களில் இடப்பெயர்ச்சி செய்து குடியேறினார்கள். எனவே இன்றும் அவ்வூரில் பெரும் வெள்ளாளரிடையே சித்தூர் சுவாமிகளின் பெயர்கள் கொண்டவர்கள் பெருமளவில் இருப்பதைக் காணமுடியும்.

"...................

**உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்**

**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்**

....................."[12]

வெண்மையான மணலும், குளிர்ச்சி பொருந்திய சோலையில் உத்திர நட்சத்திரம், நிறைமதியும் கூடிய நன்னாளில் பங்குனி உத்திரவிழா நடைபெற்றதைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

அதைப் போன்றுஆண்டு தோறும் பங்குனி மாதம் உத்திரம் நட்சத்திரத்தையொட்டி நடைபெறும் திருவிழாக்களில் நாஞ்சில் நாட்டிலிருந்து பெருந்திரளான வெள்ளாளர்கள் இன்றும் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். வெள்ளாளர்கள் சோழநாட்டின் தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை முதலிய பகுதிகளிலிருந்தும் நாஞ்சில் நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அங்கிருந்து இங்கு வந்தவர்கள் தங்கள் ஊர்களில் காணப்படும்

வயல்வெளிகள் போல் இங்கும் செழிப்பான வயல்வெளிகள் நிறைந்திருந்ததால் தாங்கள் குடியேறிய பகுதிக்கு நாஞ்சில்நாடு எனப் பெயரிட்டிருக்கலாம். ஏனெனில் மயிலாடுதுறை வட்டத்திலும் ஒரு நாஞ்சில் நாடு உள்ளது என்பது இங்கு நினைவு கூர்வதற்குரியது. நாஞ்சில் நாட்டின் நீர்வளம், நிலவளம், செழுமையான மலைகள் ஒரு கவர்ச்சியாக இருந்திருக்கலாம். நாஞ்சில் நாடும், தஞ்சை வட்டமும் ஒரே நேர்க்கோட்டில் இருப்பதால் பூகோள ரீதியாக ஒரு தொடர்பும் காணப்படுகிறது.

நாஞ்சில் நாடு பழக்கவழக்கங்களிலும், குலதெய்வ வழிபாட்டிலும், சோழ பாண்டிய நாடுகளோடு பிணைந்துக் காணப்பட்டன. எனவே தான் தங்கள் மக்களுக்கு மகாதேவன் பிள்ளை, சொக்கலிங்கம் பிள்ளை, ஏகாம்பரம் பிள்ளை, பாண்டியன் பிள்ளை, சுவாமிநாதன், நடராஜப்பிள்ளை, சிதம்பரம்பிள்ளை, நீலகண்டபிள்ளை, சிதம்பர ரகசியம், மீனாட்சி, காமாட்சி மற்றும் பாண்டிய நாட்டுத் தெய்வங்களின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

திருநெல்வேலிச் சீமையின் கிழக்குப் பகுதியான வள்ளியூர், நாங்குநேரி மற்றும் சித்தூர் முதலிய ஊர்களில் அடிக்கடி ஏற்பட்ட வறட்சி, அதன் தாக்கத்தால் விளைந்த கொலைகள், கற்பழிப்பு சம்பவங்களால் அப்பகுதி வெள்ளாளர்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் செல்ல வேண்டிய காலக்கட்டத்தில் இருந்தார்கள். அதன் காரணமாக, வளம் நிறைந்த பகுதியான நாஞ்சில் நாட்டில் குடியேறினார்கள்.

“நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள் எல்லோரும் ஒரே காலகட்டத்தில் இங்கு வந்து குடியேறவில்லை. அவர்கள் பல்வேறு காலகட்டத்தில் தமிழ்நாட்டின் சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து நாஞ்சில் நாட்டில் குடியேறியவர்கள் என்பதனை மறுக்க முடியாது. முதன் முதலாக நாஞ்சில் நாட்டிற்கு வந்து குடியேறியவர்கள் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் வந்து இருக்கலாம் என வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. கே.

பிள்ளை அவர்களும் மற்றும் திருவிதாங்கூர் மாநிலக் குறிப்பேட்டினைத் தொகுத்தவரான (Travancore State Manual) டி.கே. வேலுப்பிள்ளையும் கூறுகிறார்கள்."[13]

**பிடாகை**

"நாஞ்சில் நாடு நிர்வாக வசதிக்காக 12 பிடாகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட ஊரைச் சுற்றியுள்ள பகுதியே ஒரு பிடாகை எனப்படும். 13-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே நாஞ்சில் நாடு 12 பிடாகைகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அக்காலத்து மன்னர்களுக்கு இடையே ஏற்படும் போரில் தீவிரமாக ஈடுபட வேண்டியிருந்ததால் ஊர்களுக்கு பொதுவானவைகள் நிறைவேற்ற ஊரவை தேவைப்பட்டன என்கிறார். தே. வேலப்பன்."[14]

பிடாகைக்காரர்களால் நடத்தப்படும் கூட்டங்களுக்கு பிடாகை அல்லது நாட்டுக் கூட்டம் என்ற பெயர் காணப்பட்டது. அவர்கள் எடுக்கும் முக்கிய முடிவுகள் அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் சிறப்பு செய்ய வெண்கலமுரசு, கொம்பு, வெள்ளிக் கட்டிய பொற்கிழி ஆகியவை விருதுகளாக மன்னரால் அளிக்கப்பட்டன. 12 பிடாகைள்,

**தோவாளை தாலுகா**

1. **அழகியபாண்டியபுரம்**
2. **அனந்தபுரம் (கடுக்கரை)**
3. **நடுவுப்பிடாகை**
4. **மேல் பிடாகை**
5. **தாழக்குடி**
6. **தோவாளை**

**அகஸ்தீஸ்வரம் தாலுகா**

1. **படைப்பற்று**
2. **தேரூர்**

3. **கோட்டாறு**

4. **பறக்கை**

5. **சுசீந்திரம்**

6. **அகஸ்தீஸ்வரம்**

நாஞ்சில் நாட்டின் வடபகுதியை வடமீதியென்றும் தென்பகுதியைத் தென்மீதி என்றும் அழைப்பதுண்டு. நாஞ்சில் நாட்டில் பல்வேறு சமுதாய மக்கள் வாழ்ந்து வந்தாலும் கூட சில ஆண்டுகளுக்கு முன் வரை மருமக்கள் தாயத்தைக் கடைப்பிடித்து வந்த வேளாள சமுதாயமக்கள் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

## வேளாளரின் சொற்பொருள்

வேளாளர் என்ற சொல் வேளாண்மை என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறந்ததாகும். வேளாண்மை என்பது உழவுத் தொழிலைக் குறிக்கும். வேளாண்மை தொழிலைச் செய்து வந்த மக்கள் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர்.

சங்க இலக்கியங்கள் வேளாண்மை என்ற சொல்லை **‘உபகாரம்’** செய்தல் என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்துகின்றன.

**“தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள்: 212 )**

என்கிறது குறள்.

**“வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்”** என்கிறது திரிகடுகம். வேளாண்மை என்பது உதவி என்ற பொருளையும், வேளாளன் என்ற சொல் பிறர்க்கு உதவி செய்பவன் என்ற பொருளையும் தருகிறது. மனிதன் உயிர் வாழ உதவும், உணவுத் தானியத்தை உற்பத்தி செய்து, அனைவரும் உண்டு மகிழ உபகாரம்

செய்வதாலேயே உழவுத் தொழில் வேளாண்மைத் தொழில் என்றும், அவ் வேளாண்மைத் தொழிலைச் செய்பவன் வேளாளன் என்றும் அழைக்கப்பட்டான்.

## வேளாளர் பற்றிய செய்திகள்

சமுதாயத்தில் தலைமை வகுப்பினராக விளங்கிய அந்தணர்க்கு அடுத்து வேளாளர்கள் சங்ககாலந்தொட்டே சிறப்பாக இருந்து வந்திருக்கின்றனர் என்பதற்கு பலவிதமான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவை,

1. **இலக்கியச் சான்றுகள்**
2. **கல்வெட்டுச் சான்றுகள்**

இத்தகைய சான்றுகள் வேளாளர் சங்ககாலம் முதலே காணப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

## இலக்கியச் சான்றுகள்

இலக்கியங்கள் சமுதாயத்தில் உயர் மட்டத்தினராக விளங்கிய வேளாளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. உருத்திரங்கண்ணனாரின் பட்டினப்பாலை வேளாளரின் வாழ்க்கை நலன் பற்றிக் குறிப்பிடுகிறது.

**“கொலை கடிந்தும் களவு நீக்கியும்**
**அமரர்ப் பேணியும் ஆவுதி அருந்தியும்**
**நல்லா னோடு பக்டோம் பியும்**
**நான் மறையோர் புகழ் பரப்பியும்**
**புண்ணியம் அட்டியும் பசும் பதம் கொடுத்தும்”**[15]

வேளாளர் புண்ணிய வாழ்க்கை நடத்தியதாகக் கூறுகிறது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலம்பு, வேளாளர் பற்றிக் கூறுகிறது. “சிலப்பதிகார சமுதாயத்தில் வேளாளர் நிலை தனி ஒரு

வகையினதாகக் காணப்படுகிறது. எல்லோராலும் அவர்கள் விரும்பப்படுகின்றனர். ஆனால் சமுதாயத்தின் சரடெதுவும் அவர்கள் கையிலில்லை. அவர்களது உடனுறைவோராகத் திகழ்பவர் ஆயுர் வேதரும், காலக்கணிகரும் ஆவார். இதிலிருந்து அவர்கள் மருத்துவம், சோதிடம் போன்ற அறிவு நூல் துறைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.**”**[16]

### வரலாற்றுச் சான்றுகள்

வேளாளர் இனத்தைப் பற்றியும், சமுதாயத்தில் அவர்கள் பெற்றிருந்த இடம் பற்றியும் கல்வெட்டுகள் பல சான்றுகளைக் கூறுகின்றன. இக்கல்வெட்டுச் சான்றுகள் மூலம் பல்வேறு அரசாட்சிகளில் வேளாளர்களின் நிலை பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

### சங்ககாலம்

**“**வேளாளர்கள் எனப்பட்டோர் வேளாண்மையில் சிறந்து விளங்கினர். கல்வெட்டுகளில் இவர்களைப் பூமிபுத்திரர், நாட்டு மக்கள் என்று குறித்தனர். சித்திரமேழி நாட்டார் என்ற அமைப்பு வேளாளர்களின் நலனுக்காக இயங்கியது. தங்களுக்குச் சொந்தமான நிலங்களில் வேளாண்மை செய்த பெரும் வேளாளர்கள் தவிர நலமில்லாதவர்களும் இருந்தனர். பிராமணர்களைப் போன்று வேளாளர்களும் அரசாங்கப் பணிகளில் பொறுப்பேற்றனர். பாண்டிய மன்னன் சடையன் மாறனின் கீழ் பராந்தகப்பள்ளி வேளான் நக்கன் புள்ளன் என்பான் முக்கியமான அதிகாரியாக இருந்தான். இராசசிம்ம பாண்டியனிடம் கணக்கனாக இருந்த காடர்கோன் வேளாளன் என்பவனைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன. வேளாளர்கள் படைத்தலைவர்களாகவும் பணியாற்றினர் எனக் கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன.**”**[17]

### சோழர் காலம்

**"**வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்த வேளாளர்கள் ஓரளவு சமுதாய அந்தஸ்து பெற்றிருந்தனர். அரசாங்கப் பொறுப்பிலும் இருந்தனர். பிராமணர்கட்கு அடுத்தபடியாக அரசரின் சலுகைகள் இவர்கட்குக் கிடைத்தன. வேளாளர்களின் நிலம் '**வேளாண் வகை**' எனப்பட்டது.**"**[18]

### 2-ஆம் பாண்டியப் பேரரசு காலம்

**"**வேளாளர்கள் ஏற்கனவே அமைத்திருந்த சித்திரமேழிப் பெருநாட்டார் எனும் அமைப்பு வலுப்பெற்றிருந்தது. இவர்கள் ஏரைத் தெய்வமாக வழிபட்டனர். சித்திரமேழி பெருநாட்டார் அமைப்பு, வாணிபக் கழகம் போல் செயல்பட்டது. வேளாளர்கட்கும், பிராமணர்கட்கும், இடையில் சில மோதல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். பிராமணர்கட்கு செய்யவேண்டிய கடமையில் தவறியதுடன், அவர்களோடு சண்டையிட்டதற்காக வேளாண் ஊர் வேளாளர்களிடம் மற்ற சாதியினர் சண்டையிட்டதாகக் குறிப்பொன்று காணப்படுகிறது.**"**[19]

### விஜயநகர அரசுக் காலம்

**"**வேளாண்மையை முதன்மையாகக் கொண்டிருந்த வேளாளர்கள் பிராமணர்கட்கு அடுத்தபடியான சமுதாய அந்தஸ்தைத் தொடர்ந்து பெற்றிருந்தார்கள். கார்காத்தார், சோழிய வேளாளர், கொடிக்கால் வேளாளர் போன்ற உட்பிரிவுகளும் தோன்றின. புலால் உண்ணாத பிரிவினர் **'சைவ வேளாளர்'** எனப்பட்டனர். வேளாளர்கள் பிற சாதியினருடன் திருமண உறவு வைத்துக் கொள்ளவில்லை.**"**[20]

### நாயக்கர் காலம்

**"**பிராமணர்கட்கு அடுத்த சிறப்பை வேளாளர்கள் பெற்றிருந்தனர். இவர்களிடையே அரும்பூர் கட்டம், கார்காத்தார், கொங்கு வேளாளர், சோழிய

வேள்ளாளர், கொடிக்கால் வேளாளர் எனும் பிரிவினர் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர் எனினும் பணியாட்களைக் கொண்டே பயிர்த்தொழில் செய்தனர். பலர் வணிகர்களாகவும், படைவீரர்களாகவும், அரசாங்கப் பணியாளர்-களாகவும் பணிபுரிந்தனர். இவர் **'பிள்ளை'** எனும் சாதிப் பட்டத்தைத் தங்கள் பெயருடன் இணைத்திருந்தனர். இவர்கள் பெரும்பாலும் சைவ சமயத்தையே பின்பற்றினர். சைவ உணவையே உண்டனர்.**"**[21]

## மராட்டியர் காலம்

**"**மராட்டியர் காலத்தில் வேளாளர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்களில் பலர் நிலச்சுவான்தாரர்களாகவும், சிலர் நிலங்களில் பணிபுரியும் ஊழியர்களாகவும் இருந்தனர். இவர்கள் மத்தியில் காராளக் குடியினர், வாழையிலைக் குடியினர், வெற்றிலைப் பேட்டையர் என்ற மூன்று பிரிவினர்கள் தோன்றினர். தஞ்சையைச் சேர்ந்த வேளாளர்கள் தங்களைச் சோழிய வேளாளர்கள் என்று அழைத்துக் கொண்டனர்.**"**[22]

## நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் பிரிவுகள்

நாஞ்சில் நாட்டு வேளாளர்களிடையே இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அவை மக்கள் வழி, மருமக்கள் வழி என்பவை ஆகும். இப்பிரிவு குமரி மாவட்டத்தில் மட்டுமே காணப்படுகிறது.

## மக்கள்வழிப்பிரிவு

மக்கள் வழி வேளாளர் இனத்தவர் குமரி மாவட்டத்தில் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். திருநெல்வேலி மாவட்டதிலும் வசிக்கின்றனர். இப்பிரிவு மக்கள் **"செட்டி வேளாளர்"** என்று மருமக்கள் வழி மக்களால் அழைக்கப்படுகின்றனர். இப்பிரிவில் ஒருவரின் சொத்துக்கள் அவரின் மனைவி,

மக்களுக்கே உரிமையுடையவை. அவர்களது திருமணச் சடங்குகள் மருமக்கள்வழி வேளாளர்களின் சடங்குகளை ஒத்திருந்தாலும் ஒரு சிலவற்றில் மாறுபடுகின்றன.

## மருமக்கள் வழி பிரிவுகள்

குமரி மாவட்டத்தில் மருமக்கள் வழி பிரிவினர், மக்கள் வழி பிரிவினரைவிட, அதிகமாகக் காணப்படுகின்றனர். இப்பிரிவினரில் ஒருவரின் சொத்துக்கள், அவர் இறந்த பின் அவரின் சகோதரி மக்களுக்கு உரிமையுடையது. இது முன்பிருந்த நிலையாகும். சொத்துக்கள் செல்லும் நிலையை வைத்தே வேளாளர் இனத்தில் இருபிரிவுகள் தோன்றின. முன்பு மருமக்கள் வழி வேளாளர்கள், மக்கள் வழி வேளாளர்களுடன் திருமண உறவு கொள்வதில்லை. தற்போது இந்நிலை மாறிவிட்டது. இரு பிரிவினரும், மற்றொரு பிரிவினருடன் திருமண உறவு செய்து கொள்கின்றனர்.

## மருமக்கள் தாயமுறை வந்த விதம்

முன்பு நாஞ்சில் நாட்டு வேளாளர்களிடையே இரு பிரிவு இல்லை. இவர்கள் தமிழகத்தில் பிற பகுதிகளிலிருந்து குமரியில் குடியேறியவர்கள். "நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் எப்பொழுதும் தங்கள் தாயகமாகிய சோழ, பாண்டிய தேசங்களையே எண்ணிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் அவர்களைத் தமது நாட்டு நிலைகுடிகளாகச் செய்துவிட வேண்டுமென்று சேர அரசன் எண்ணினான். அவர்கள் தங்கள் பூர்வீக நாட்டிற்குப் போய் விடாதபடி மருமக்கள் தாயச் சட்டத்தை அவர்கள் மேற்கொள்ளும்படிச் செய்தான் என்றொரு கர்ண பரம்பரைச் செய்தி வேளாளரிடையே வழங்குகிறது.

வேறொரு செய்தியும் வழங்குகிறது. பாண்டியன் ஒருவனுக்கும், சேரன் ஒருவனுக்கும் நாஞ்சில் நாட்டின் உரிமையைப் பற்றி விவாதம் நிகழ்ந்தது. இருவரும் தங்களுக்கே நாஞ்சில் நாடு உரிமையுடையது என்றனர். இவ்விவாதத்தை

அந்நாட்டினரே தீர்க்க வேண்டியதாயிற்று. அவர்கள் சேரர் ஆட்சியில் வாழ்தலை விரும்பி, தாங்கள் மருமக்கள் தாயங்களே என்றும், அத்தாய முறையைத் தங்கள் முன்னோர்கள் மேற்கொண்டு விட்டனர் என்று கூறி விவாதத்தை முடித்தனர். இது நிகழ்ந்தது கி.பி. 1116-இல் என்று ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயிலிலுள்ள ஓர் ஓலைப் பத்திரம் தெரிவிக்கிறதெனத் திருவிதாங்கூர் தேசச் சரித்திரம் கூறுகிறது.**"**[23] மேற்கூறப்பட்ட இரு செய்திகளாலும், மக்கள் தாயமுறையைக் கொண்ட நாஞ்சில் நாட்டு வெள்ளாளர், அரசியல் காரணங்களால் மருமக்கள் தாயமுறையைப் பின்பற்றினர் என்பதும் உறுதியாகிறது.

## மருமக்கள் தாய முறையின் தன்மை

மருமக்கள் தாயமுறையின் தன்மை மிகவும் விசித்திரமானவை. **"**குடும்பத் தலைவன் காரணவன் என்று அழைக்கப்படுகிறான். காரணவனின் பூர்வீகச் சொத்து அவனது சகோதரிகளின் குழந்தைகளுக்குத் தான் உரிமையுடையவை. அவனுடைய குழந்தைகளுக்கு உகந்துடமை என்னும் சிற்றுரிமையைத் தவிர வேறு எந்த உரிமையும் இல்லை. சகோதரியின் குழந்தைகளுக்கும், பூர்வீகச் சொத்தைப் பாகப்பிரிவினை கேட்க உரிமை இல்லை. இயற்கையான அன்பு தன் குழந்தைகள் மீது செல்ல, செயற்கையான சட்டம் அந்த அன்பிற்கு இடம் கொடாதபடி தன் சகோதரியின் குழந்தைகளுக்கு அவகாசிகள் என்ற நிலையில் குடும்பச் சொத்தைக் கொடுக்கும்படிச் செய்தது. சகோதரியின் குழந்தைகளுக்குச் **'சேஷகாரர்'** என்று பெயர். இவர்களின் சொற்கேட்டு காரணவர் நடக்கத் தவறினால், அவனைக் **குடும்பதோஷி** என்று கூறி காரணவன் ஸ்தானத்திலிருந்து நீக்க வழி தேடுவார்கள். குடும்பச் சொத்தைப் பெருக்க வேண்டுமென்று காரணவன் நினைப்பதற்கே இடமே இல்லாமல் போய்விட்டது. குடும்பச் சொத்துக்களும் பாழாகும் நிலை வந்துவிட்டது. நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் பெருங்குடும்பங்கள் இவ்வாறாக அல்லற்பட்டு தவித்துக் கொண்டிருந்தன.**"**[24]

## ஏற்பட்ட மாற்றம்

இந்நிலைமைகளையெல்லாம் நோக்கி, தங்களுக்குரிய உரிமை பற்றிய இச்சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்து நாஞ்சில் நாட்டு மக்கள் மனதில் தோன்றிற்று. **"**இக்கருத்து சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் பிரச்சாரம் செய்யப்பட்டது. பலரும் சேர்ந்து போராடினார். இதற்கான சீர்திருத்த மசோதா 1926-ஆம் ஆண்டு சட்ட சபையில் நிறைவேறி 1927-இல் அமலுக்கு வந்தது. இதன் பின் ஒரு குடும்பத் தலைவனின் பூர்விகச் சொத்துக்கள், அவனது மனைவிக்கும், குழந்தைகளுக்குமே என்ற நிலை வந்தது.**"**[25] இந்தச் சட்டம் அமலுக்கு வருமுன் கணவனை இழந்த பெண்ணின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாய் இருந்தது. காரணவனின் மனைவி, மக்களை ஆதரித்துக் கவனிக்கும் பொறுப்பு சேஷக்காரர்களுக்கு சிறிதும் இல்லை. கணவன் இறந்த 16-ஆம் நாள் மனைவி, மக்களுக்கு உகந்துடைமை எனும் சொத்துரிமை அல்லது 1000 பணம் கொடுத்து அனுப்பிவிடுவர். இந்நிலையை,

> **"ஐயோ,**
> **துயரம், துயரம், பிறப்போ, துயரம்,**
> **பிறப்பினும் துயரம், பெண்மகளாதல்**
> **பெண் மகளாதவிற் பெரிதும் துயரம்**
> **மருமக் கள்வழி வலையிற் படுதல்"**[26]

என்று கவிமணி அழகாகச் சுட்டுகிறார்.

## சைவ வேளாளர்

**"**சைவ வேளாளர்கள் பாண்டி நாட்டிலிருந்து குமரி மாவட்டத்திற்கு குடிப் பெயர்ந்து வந்தவர்களேயாவர். சைவத்தின் தாயகம் நெல்லை என்பர்.**"**[27] **"**சைவம் என்பது **'சிவம்'** என்ற சொல்லிலிருந்து தோன்றியது. சிவம் என்னும் சொல் நன்மை,

மங்கலம், செம்மை என்று பொருள்படும். சைவம் என்பது சிவத்துடன் சம்பந்தம் என்று பொருள்தரும் அந்தச் சம்பந்தத்தை அறிந்து உணர்ந்து, அச்சிவத்தோடு சேர்ந்து அதனால் மக்கள் மேல் நிலைக்கு தோன்றிய சமயம் சைவ சமயம் அல்லது சைவம் எனப்படும். சைவ நெறியுடன் வாழ்ந்த வேளாளர்களே சைவ வேளாளர் எனப்பட்டனர்.”[28] “பண்டைக் காலத்தில் கொலையும், புலாலுணவும் மறுத்து சிவவழிபாடு இயற்றி வந்தமையின் சைவ வேளாளர் எனப்பட்டனர்.”[29]

## சைவ வேளாளரின் பழமை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் புதையுண்ட நகரங்களும், அவற்றில் கிடைத்துள்ள பொருள்களும், சிவலிங்கம், நடராஜர் போன்ற உருவங்களும் சைவ வேளாளரின் சிவ நெறியின் தொன்மையை எடுத்துரைக்கின்றன. சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்த நாடாக விளங்கிய சிந்து வெளி பிரதேசத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இதில் புதையுண்டிருக்கும் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் பெரிய மற்றும் சிறிய சிவலிங்கங்கள் ஆயிரக் கணக்கில் கிடைத்துள்ளன என்றும், ஹரப்பாவில் மட்டும் 600 - க்கு மேற்பட்ட லிங்கங்கள் கிடைத்துள்ளன என்றும் தெரியவருகிறது. இவ்வாராய்ச்சியால் சைவ சமயம் சிந்துவெளி நாகரிகத்துக்கும் (கி.மு. 4000-க்கும்) முற்பட்ட பழமையுடையது என்ற தகவலை அறிய முடிகிறது.

## சைவ வேளாளரின் நிலை

தோவாளை வட்டத்தில் சைவ வேளாளர்கள் குறைந்த அளவில் வாழ்கின்றனர். தோவாளை வட்டத்திலுள்ள அருமநல்லூர், செண்பகராமன்புதூர், தெரிசனங்கோப்பு, இறச்சகுளம், வெள்ளமடம், ஈசாந்திமங்கலம், கடுக்கரை, காட்டுப்புதூர். சிறமடம், அழகிய பாண்டியபுரம், குறத்தியறை, தெங்கம்புதூர் ஆகிய ஊர்களில் ஒரு சில

குடும்பத்தினரே வசிக்கின்றனர். இவர்கள் கல்வி, பொருளாதாரத்திலும், தொழிலிலும் சிறந்து விளங்குகின்றனர்.

## சமுதாயத்தில் வேளாளர்களின் நிலை

**‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’** என்றார் பாரதி. ஆனால் இன்றைய மக்கள் விவசாயத்தை விரும்புவதில்லை. வயல் வெளிகளிலெல்லாம் கட்டிடங்கள் எழும்பி நிற்கின்றன. வானின் கருணையை நம்பி, விவசாயத்தையே மூச்சாகக் கொண்டு விளங்கும் வேளாண் பெருமக்கள் இன்று சமுதாயத்தில் சிறந்த நிலையில் இல்லை.

## பரவியுள்ள இடங்கள்

வெள்ளாளர்கள் என்றும் பிள்ளைமார்கள் என்றும் அழைக்கப்படும் வேளாளர்கள் குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுகாக்களில் சில குறிப்பிட்ட கிராமங்களில் பெருவாரியாக வசிக்கின்றனர். இவர்கள் வாழும் ஊர்களில் பிற சமுதாயத்தினர் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கின்றனர். அகஸ்தீஸ்வரம் தாலுக்காவில் இரவிபுதூர், கரியமாணிக்கபுரம், வடக்குத் தாமரைகுளம், உசரவிளை (குலசேகரன் புரம்), நல்லூர், பறக்கை, மருங்கூர், தேரூர், கிருஷ்ணன் கோவில், புத்தேரி, ஒழுகினசேரி ஆகிய கிராமங்களிலும், தோவாளை தாலுகாவில் அருமநல்லூர், செண்பகராமன்புதூர், தெரிசனம்கோப்பு, இறச்சகுளம், வெள்ளமடம், ஈசாந்திமங்கலம், கடுக்கரை, காட்டுப்புதூர், சிறமடம், அழகியபாண்டியபுரம், குறத்தியறை, கேசவன்புதூர், தெங்கம்புதூர், நாவல்காடு ஆகிய கிராமங்களிலும், சீதப்பால், வீரநாராயணமங்கலம், அந்தரபுரம், விளங்காடு, கடுக்கரை, இரவிபுதூர் ஆகிய ஊர்களில் குறைந்த எண்ணிக்கையிலும் வசிக்கின்றனர்.

## தொழில்

இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். சென்ற தலைமுறையைச் சார்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலில் இருக்க, இன்றைய இளைஞர்கள் வேளாண்மையை உதறிவிட்டனர். கல்வி நிலையில் சிறந்து விளங்குகின்றனர். மருத்துவர்களாகவும், பொறியியல் நிபுணர்களாகவும், ஆசிரியர்களாகவும், கல்லூரியில் பேராசிரியர்களாகவும், அரசு ஊழியர்களாகவும் இதரபல துறைகளிலும் இவ்வினத்தவர்கள் பணிபுரிகின்றனர்.

## கல்வி

வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்த இன்றைய இளம் தலைமுறையினர் அனைவருமே கல்வி கற்கின்றனர். அரசின் முன்னேறிய வகுப்பினர் என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளதால் இட ஒதுக்கீடுகள் இவர்களுக்கு இல்லை. எனவே மருத்துவம், பொறியியல் கல்வி பயிலுபவர்கள் குறைவாகவே உள்ளனர். ஆனால் தற்போது பொறியியல் கல்லூரி அதிகம் உள்ளதன் காரணமாகக் பயிலும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. பெண்கள் அனைவருமே கல்வி பயில்கின்றனர். கிராமப்புறங்களில் உள்ள பெண்களில் சிலர் மட்டுமே பள்ளி இறுதி வகுப்புகளுடன் கல்வியை நிறுத்திக் கொள்கின்றனர்.

இச்சமுதாய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக குமரிமாவட்டத்தில் செண்பகராமன் புதூரில் என்.எஸ்.கே. தொழில் நுட்பகல்லூரியும், கலைவாணர் என்.எஸ்.கே. கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும், வேளாளர் அறக்கட்டளையும், மழலையர் தொடக்கப் பள்ளியும் தொடங்கப்பட்டுள்ளன.

## பொருளாதாரம்

பொருளாதாரத்தில் முன்னேறியவர்கள் என்று இச்சமுதாயத்தினர் முத்திரைக்

குத்தப்பட்டாலும், அனைத்து மக்களும் செல்வ செழிப்புடன் இல்லை. 100-க்கு 10 சதவீதம் மக்களே செல்வந்தர்களாக விளங்குகின்றனர். பெரும்பாலான மக்கள் நடுத்தர வர்க்கத்தினராயும், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அனைத்து மக்களுக்கும் சொந்த நிலம் இல்லை. பிறர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, உழுது, பயிரிடுபவர்களும் உண்டு.

## பெண்கள் நிலை

சுமார் 50 வருடங்களுக்கு முன், இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் வெளியே வருவதில்லை. இந்த நிலை தற்போது மாறிவிட்டது. கல்வி, வேலைக்குச் செல்லுதல் ஆகியவற்றில் பெண்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர். அதிகமாக வரதட்சணை வாங்குதல் இச்சமுதாயத்தில் காணப்படுகிறது. செல்வந்தர்கள் நிலமும், பொன்னும், மிக்கப் பொருளும் கொடுக்கும் வழக்கம் உள்ளது.

## சமயம்

வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் இந்துக்களாகவே உள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குலதெய்வம் என்றொரு தெய்வம் இருக்கிறது. குறிப்பிட்ட நாளில் குடும்பத்தினர் அனைவரும் அங்கு கூடி தெய்வத்தை வழிபடுகின்றனர். அதிகமாக **‘அம்மன்’** எனும் பெண் தெய்வத்தை வழிபடுகின்றனர். இந்து சமயத்திலிருந்து கிறிஸ்துவ மத்திற்கு மாறியவர்கள் ஒரு சிலர் உண்டு. முஸ்லீம் மத்திற்கு மாறியவர்கள் யாரும் இல்லை. இவ்வாறு மதம் மாறியவர்களுடன் வேளாளர்கள் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை.

## முன்னேற்றம்

வேளாளர் சமுதாயத்தினர் கல்வியில் முன்னேற்றமடைந்திருந்தாலும்,

பொருளாதாரத்தில் பின் தங்கியே காணப்படுகின்றனர். **“உழவன் மீதி உழவுக் கம்பெனக்”**[30] கூறுவது உண்மையாகவே காணப்படுகிறது. சேர்ந்து செயலாற்றும் தன்மை மிகக் குறைவாகவே உள்ளது. வேளாளர் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக வெள்ளாளர் சமுதாயச் சங்கம் ஒன்று இயங்குகிறது. இந்த மக்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளதால் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வேளாளர் இனமக்களையும் சேர்க்குமாறு அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டதோடு, ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

- வெள்ளத்தை ஆள்பவன் வெள்ளாளன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்
- தொழில் அடிப்படையில் தோன்றிய சமுதாயமே வேளாளர் சமுதாயம்.
- நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் பூர்வீகம் சோழ, பாண்டிய நாடாகும்.
- நாஞ்சில் என்ற பெயரும், வேளாளன் என்ற பெயரும் சங்ககாலம் முதலே வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு இலக்கியங்கள் சான்று கூறுகின்றன.
- வேளாளர் இனத்தவர்கள் சங்ககாலத்தில் தமிழகத்தை ஆண்ட பிற மன்னர்கள் காலத்திலும் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர்.
- வேளாளர் என்ற பெயரே குமரிமாவட்டத்தில் வெள்ளாளர் என மருவி வழங்கப்படுகிறது. இவர்களிடையே இருந்து வந்த மக்கள் வழி, மருமக்கள் வழி என்னும் பிரிவுகள் அரசியல் காரணமாகவே உருவானது. பின் மக்களின் போராட்டத்தால் மருமக்கள்தாய முறை மாறியது.

- வேளாளர் சமுதாயத்தினர் கல்வியில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், பொருளாதாரத்தில் பின் தங்கியே காணப்படுகின்றனர்.

- பெண்களின் நிலை, இச்சமுதாயத்தில் சிறப்பானதாகவே காணப்படுகிறது.

- இச்சமுதாய மக்களின் நன்மைக்காகவே வேளாளர் சமுதாயச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மக்கள் வழி வேளாளர்களின் சொத்துக்கள் அவர்களின் குழந்தைகளுக்கே உரிமையானது. ஆனால் மருமக்கள் வழியில் அவர்களின் சொத்துக்கள் சகோதரியின் குழந்தைகளுக்கே உரிமையாகக் கருதப்பட்டது.

- பன்னிரெண்டு பிடாகைகளைப் பிரித்து அதற்கும் ஒரு தலைவரைக் கொண்டுள்ளனர் வேளாளர்கள்.

- இவர்களால் நடத்தப்படும் கூட்டம் நாட்டுக் கூட்டம் என்றழைக்கப்பட்டது.

- நாஞ்சில் என்பதற்கு கலப்பை என்றும் பொருள் உண்டு.

- நாஞ்சில் நாட்டைச் சார்ந்த வேளாளர்களில் பெரும்பான்மையோர் பாண்டிய நாட்டிலிருந்து குடியேறியவர்களாவர்.

- வேளாளர்கள் அரசியல் நடத்துவதற்கு துணை புரிந்தனர்.

- குமரி மாவட்டத்தில் வாழும் வேளாளர்களே **“நாஞ்சில் நாட்டு வேளாளர்கள்”** என்ற அடைமொழியில் அழைக்கப்பட்டனர்.
- வேளாண்மை குலத்தொழில் என்றாலும் கணக்கிலும் புலியாக காணப்பட்டதால் கணக்குப்பிள்ளை பதவியை வகித்தனர்.

- சமுதாயத்தில் அந்தணர்களுக்கு அடுத்தபடியான அந்தஸ்தில் வேளாளர்கள் காணப்பட்டனர்.

- கல்வெட்டு வேளாளர்களைப் **'பூமி புத்திரர்கள்'** என்று குறிப்பிடுகிறது.

- வேளாளர்களின் நிலம் **'வேளாளர்வகை'** நிலம் என்று அழைக்கப்பட்டது.
- பங்குனி மாதம் உத்திர நட்சத்திரமும் நிறைமதியும் கூடிய நாளில் உத்திரம் திருவிழாவைக் கொண்டாடினர்.

- நாஞ்சில் நாடு நிர்வாகத்திற்காக 12 பிடாகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

- மருமக்கள் தாய்முறையில் சகோதரியின் குழந்தைகளை ஆதரிக்காதவர் **'குடும்பதோஷி'** என்று அழைக்கப்பட்டார்.

- 1927-ஆம் ஆண்டுக்கு பின்னரே பூர்வீகச் சொத்துக்கள் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் உரிமையாக சட்டம் நிறைவேற்றப்பட்டு மருமக்கள் தாயமுறை ஒழிந்தது.

## இயல் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1. கார்த்தி | சமுதாய வரலாற்றுச் சுருக்கம் | ப. 27 |
| 2. மு. தாசன் | தொல்காப்பிய களஞ்சியம் பொருளதிகாரம் - 1 | ப. 56 |
| 3. இராமநாத பிள்ளை (தகவலாளி) | | |
| 4. சிந்தாமணி | கன்னியாகுமரி மவாட்ட மலர், 1984 | ப. 4 |
| 5. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | மருமக்கள் வழி மான்மியம் | ப. 7 |
| 6. மேலது | நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் | ப. 7 |
| 7. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | மே. ப. | ப. 7 |
| 8. சிந்தாமணி | மே. ப. | பக். 1-2 |
| 9. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | மே. ப. | பக். 8-9 |
| 10. மே. ப. | | ப. 11 |
| 11. மே. ப. | | ப. 12 |
| 12. செயபால் | அகநானூறு | பா. 136 |
| 13. டி.கே. வேலுப்பிள்ளை | Travancore State Manual | ப. |
| 14. தே. வேலப்பன் | நாஞ்சில் நாடு | ப. 90 |
| 15. தே. வேலப்பன் | பாரதியின் பொருளியல் கருத்துக்கள் | ப. 4 |
| 16. மே. ப. | | ப. 11 |
| 17. பி. கோமதி நாயகம் | தமிழகச் சமுதாயப் பண்பாட்டு வரலாறு | ப. 116 |
| 18. மே. ப. | | ப. 149 |
| 19. மே. ப. | | ப. 198 |

| | | |
|---|---|---|
| 20. மே. ப. | | ப. 228 |
| 21. மே. ப. | | ப. 287 |
| 22. மே. ப. | | ப. 307 |
| 23. வையாபுரிப்பிள்ளை | மே. ப. | ப. 16 |
| 24. மே. ப. | | ப. 30 |
| 25. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் | ப. 55 |
| 26. மே. ப. | | ப. 55 |
| 27. எம்.எம். கண்ணப்பன் (க.ஆ) | தமிழ் நாடு சைவ வேளாளர் சங்கம் சிறப்பு மலர் | ப. 41 |
| 28. ச. சச்சிதானந்தம் பிள்ளை | சைவ மாநாட்டு சொற்பொழிவுகள் | பக். 175- 176 |
| 29. மறைமலையடிகள் | வேளாளர் நாகரிகம் | ப. 16 |
| 30. மேலது | மேலது | ப. 55 |